# புதுச்சிருஷ்டிக்கான சிந்தனை துளிகள்

07

15 ஜூலை 2024

## பலியின் மரணமா அல்லது உண்மையான மரணமா?

**Q221 : 1**

**கேள்வி** (1916) - 1 - சங்கீதம் 116:15 - "***கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது.***" இவ்வசனத்தில், தினந்தோறும் பரிசுத்தவான் அனுபவிக்கும் பலியின் மரணம்குறித்துக் குறிப்பிடப் பட்டிருக்கின்றதா அல்லது பரிசுத்தவானுடைய உண்மையான மரணம்குறித்துக் குறிப்பிடப்பட்டிருக்கின்றதா?

**பதில்:** இவ்வசனத்தின் விஷயத்தில் நாம் வாக்குவாதம் செய்ய வேண்டியதேயில்லை. பரிசுத்தவான் சம்பந்தப்பட்ட ***அனைத்து விஷயங்களுமே*** தேவனுக்கு விலையேறப்பெற்றவையாகக் காணப்படுகின்றது. பரிசுத்தவான் தன்னை அர்ப்பணம்பண்ணும் தருணமானது, தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றதாகக் காணப்படுகின்றது. முதல் பரிசுத்தவானாகிய இயேசு தம்மை அர்ப்பணம்பண்ணினபோது, அது தேவனுடைய பார்வையில் விலையேறப் பெற்றதாய்க் காணப்பட்டது; அத்தருணத்தில் இயேசுவின்மீது பரிசுத்த ஆவியினை பிதா இறங்கிவரப்பண்ணி, அவர் தேவனுடைய குமாரன் என்று அறிக்கை பண்ணினார். நாம் அடியெடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியிலும்கூடத் திவ்விய தயவும், ஆசீர்வாதமும் நமக்குக் காணப்படும்; ஏனெனில் பரிசுத்தவான் சம்பந்தப்பட்ட ***அனைத்துக் காரியங்களுமே*** தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றவையாகக் காணப்படுகின்றது. அர்ப்பணிப்பும், இப்படி அன்றாடம் மரித்தலும், இன்னுமாக இறுதியில் உண்மையாக மரித்தலுமாகிய இவைகள் ***அனைத்துமே*** பிதாவுக்கு விலையேறப்பெற்றவையாகக் காணப் படுகின்றன. இப்படிச் செய்பவர்கள் அனைவருக்கும், அவர் மகா பலனை அருளவிருக்கின்றார்; ஆகையால் இத்தகையவர்கள் அவர் பார்வையில் விலையேறப்பெற்றவர்களாகவே இருப்பார்கள்.

**- பாஸ்டர் ரசல் அவர்களின் பதில்கள்**